**ARTICLE 11 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00044**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 57–61
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# தேன்கிண்ணம் கவிதையில் இறையும் இயற்கையும்

**மோனிகா காந்தி மோ[1,*], முனைவர். வைடூரியம்மாள் பா[2]**

[1](பதிவு எண்: 241111701004) முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி., India

[2]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** மோனிகா காந்தி மோ — bvaiduma@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

அறிஞர் சூ.செல்லப்பா ஓர் இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாக பணியாற்றியபோது பல கவிதை நூல்களைப் படைத்துள்ளார். “தேன் கிண்ணம்” என்னும் தலைப்பிலான கவிதைத் தொகுதியில் பல பாடு பொருள்களைக் கவிதையாக்கியுள்ளார். அவற்றில் இறை, இயற்கை இவ்விரண்டைப்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.படைப்பாளி, ஏராளமான கவிதை நூல்களையும், மொழி பெயர்ப்புக் கவிதைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் உருவாக்கியிருந்தாலும் “தேன்கிண்ணம்” எனும் கவிதை நூல் மட்டுமே இதன் ஆய்வு எல்லையாக அமைகின்றது.இயற்கையைப் பற்றிய கவிதையில் மனித இனத்திற்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்கும் பயன் அளிக்கும் தன்மையையும் கடவுள் பற்றிய புரிதலும் இவ்ஆய்வின் பயனாகக் கொள்ளப்படுகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** இறை; இயற்கை; கவிதை; இயற்கையின் கொடை

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மோ, மோ. கா., & பா, மு. வை. (2026). தேன்கிண்ணம் கவிதையில் இறையும் இயற்கையும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

பன்முகப் படைப்பாளியான சூ.செல்லப்பா அவர்கள் இந்திய ஆட்சிப் பணி (IAS) அதிகாரியாகப் பணியாற்றிய அனுபவங்களினூடாக, தனது கவியாளுமையின் வழி பல கவிதைகளையும் படிப்போரின் செவிகளுக்குத் தேன் கலந்து கொடுத்திருக்கும் இனிமையான வரிகளுக்குரியவர். கரிசல் பூமியில் பிறந்து, சவேரியார் கல்லூரியில் பயின்று, ஆந்திர மாநிலத்தில் பணியாற்றிய படைப்பாளியின் வாழ்வியல் சூழலில், தன்னுடைய ஊரின் நிலையைப் பல கவிதைகளாக்கித் தந்துள்ளார். தன்னுடைய இறை அனுபவங்களையும் அழகியல் நோக்கிலும் அங்கத மொழியிலும் கவிதையாக்கம் செய்துள்ளதை இக்கட்டுரை விளக்குவதாக அமைகின்றது.

## இயற்கைச் சித்திரிப்பு

மனித குலத்திற்கு இயற்கை கொடுத்திருக்கும் ஏராளமாக கொடைகளைப் பெற்றுக் கொண்டு, இயற்கையை அழிப்பதில் கவனம் செலுத்தக்கூடாது என்ற பதிலைக் காண முடிகின்றது.

“கேட்டால் கொடுக்கும் இயற்கை

கேளாமலும் கொடுப்பவன் கடவுள்”
-ப.11- தேன்கிண்ணம்

## இயற்கை உணவு

கவிஞர் தன்னுடைய உடல், பொருள், ஆவி என அனைத்திலும் இயற்கை ஊடாடியிருப்பதைச் சித்திரிப்புச் செய்துள்ளார். என்னுடைய கண்கள் தின்பது சூரியனின் காலைச் செவ்வானம். எனது காதுகளில் கடல் அலைகளின் இரைச்சல் பாடல்களாகப் பதிந்துள்ளன. நெஞ்சம் உயிர்ப்பது இதமான தென்றல் காற்று வழியாக என இயற்கை அழகு தனக்கு உணவாக அமைந்துள்ளதைக் கூறியுள்ளார். வாழ்நாளில் நெல், அயிரை மீன், காய், கனிகள் எல்லாம் எனக்கு உணவாகின்றன. இறுதியில் என் மூச்சு நிற்கும்போது என் உடலை இயற்கையே உணவாக்கிக் கொள்கின்றது. அதாவது, இறந்த பின்னர் மண்ணில் அடக்கம் செய்யும் நிலையினைத் தெளிவுபடுத்துகின்றார்.

“-----------
நான் வாழும் போது
நீ எனக்கு உணவாகிறாய்
நான் சாகும்போது
என்னையே உணவாக்கிக் கொள்கிறாயே!”

**-ப.18- தேன்கிண்ணம்**

என்ற கவிதை வரிகளில் இறந்தபின்பு உடலை இம்மண் தின்கிறது என்ற நிலையாமைக் கருத்தினைச் சுட்டியுள்ளார். இயற்கை உணவு பற்றிய இக்கவிதையில், வேளாண்குடி மக்களின் வாழ்வியல் நிலைமாகிய மருத நில வயல்களிலும் ஓடைகளிலும் ‘அயிரை மீன்’ ஆடி ஓடி விளையாடுகின்றன என்ற செய்தியினையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## இயற்கை அழிப்பு

கவிஞர் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், தான் பிறந்து வளர்ந்த ஊரின் இயற்கையான ஆறு, குளம் ஆகியவற்றை எடுத்தாண்டுள்ளார். வேளாண்மைக்குப் பயன்படும் குளங்கள் மழையின்றி வற்றிப் போனால் என் கண்கள் கண்ணீர்க் குளம் ஆகும் என்கிறார். கோடைக்காலத்திலும் வீசும் காற்றினால் செடி, உதிர்ந்து போவதை, மரங்களின் சேலைகள் அவிழ்க்கப்படுவதாகக் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து வரும் புதிய தளிர் அவற்றை தாவணியால் போர்த்திக் கொள்ளும் என்ற இளமங்கையை உருவகமாக்கியுள்ளதை ஆசிரியரின் கவியாளுமையாகக் குறிப்பிடலாம்.

படைப்பாளியின் பிறந்த ஊரான மு.கோட்டூரில் ஓடுகின்ற வைப்பாற்றில் மணல் கொள்ளை போவதைக் கண்டிக்கிறார். ஆற்றில் மணல் கொள்ளையடிக்கப்படுவதால் வைப்பாறு தன் ஆடையினை இழந்தது என்பதை,

“குளங்கள் வற்றிடக் கண்டால்
குளங்கள் ஆகும் என் கண்கள்!
கோடைக் காற்றும் கொஞ்சம்
செடி கொடிகளின் சேலையை அவிழ்தாலே
குமுறிக் குலையும் என் நெங்சம்!
புதுத் தளிர்த் தாவணியாலே

போர்த்தி மகிழ்ந்து கொஞ்சும்!
ஆற்று மணல் கொள்ளையினால்
ஆடை இழந்தது வைப்பாறு"
--------------------
இயற்கையை அழித்து நீயும்
யாருடன் வாழ்வாய் இங்கே?"
-ப.24- தேன்கிண்ணம்

மேற்சுட்டிய கவிதை வரிகளில் அழகுபடக் கூறியுள்ளதை அறிய முடிகின்றது.

மனித இனம் ஏன் தற்கொலை செய்து மாய்த்துக் கொள்கிறது? என்ற கேள்வியை, இயற்கைத் தாயிடம் கேட்கிறார். இயற்கை அன்னையே பலவித படைப்புகளை நீ படைத்துள்ளாய். சிறிய உயிர்கள் என்று நாங்கள் கருதுகின்ற ஆடு, மாடு, அணில், மயில் போன்ற உயிர்கள் தங்களுக்கு எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவைகள் தற்கொலை செய்யமாட்டா? ஆனால் ஆறறிவு கொண்ட மனிதன் மட்டும் தற்கொலை செய்வதன் ஒழுக்கம் என்ன? என்ற வினாவை எழுப்பி, தற்கொலை செய்யக்கூடாது என்ற கருத்தைப் படைப்பாளி தமது கவிதையில் சுட்டியுள்ளார்.

"இயற்கைத் தாயே!
படைப்புகள் பற்பல நீ படைத்தாயே!
சிற்றுயிர் என்று நாங்கள் கருதும்
ஆடும், மாடும் அணிலும் மயிலும்
எத்தனைத் துன்பங்கள்
எதிர் வந்தாலும்
தற்கொலை செய்யா.......?"
-ப.33- தேன்கிண்ணம்

## கவிதைகளில் இறை

படைப்பாளி சூ.செல்லப்பா அவர்கள் இறை நம்பிக்கைக் கொண்டிருப்பவராகத் தன்னுடையக் கவித்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். அழகான இவ்வுலகத்தைப் படைத்த கடவுள் தன்னுடையப் பெயரை எங்கும் குறிப்பிடாமல் இருந்துள்ளதாகக் கூறுகின்றார். பல்வேறு சமயங்கள் பல பெயர்களுடன் இறைவனை வழிபடு தெய்வமாகச் சுட்டியுள்ளன. கவிஞர் சூ.செல்லப்பாவும் எவரும் கடவுளுக்குச் சூட்டாத ஒரு புதிய பெயரைப், "படிமக் கலைஞன்" என்று கவியாக்கியுள்ளார்.

" அழகிய உலகத்தை ஆக்கிய
அந்தப் படிமக் கலைஞன்
எங்கும் தன்னுடைய பெயரை
எழுதாமல் மறந்தது ஏன்"?
-ப.11- தேன்கிண்ணம்

என்ற வரிகளில் உலகைப் படைத்த படிமக் கலைஞனாகக் கடவுளைச் சித்திரித்துள்ளார்.

இவ்வுலகைப் படைத்த கடவுள் பல நிலைகளில் காலச் சக்கரத்தை, உலகம் இயங்கும் நிலையை எப்படி செயல்படுத்துகின்றான் என்ற கருத்து, படைப்பாளியிடம் ஏற்பட்டது. இறைவனைப் பார்க்க வடதிசைக்குச் சென்றார். ஆனால் இறைவனோ குடதிசை முடியை வைத்துக் குறட்டை விட்டு நித்திரை செய்ததாகப் பதிவிட்டுள்ளார். காலச்சக்கரம் ஓட்டுவதை

விட்டு விட்டு அவனால் எப்படி உறங்க முடிகின்றது? என்று சிந்திக்கும் வேளையில், இறைவனது கண்கள் விழித்துக் கொண்டன. அவனது கனிந்த உதட்டில் சிரிப்பு மின்னியது என்கிறார். உன்னால் எப்படி அமைதியாக உறங்க முடிகின்றது? இந்த அமைதியை எனக்கும் அருள்வாய் எனக் கவிஞர் கேட்டபோது, இரண்டு கட்டளைகளைக் கொடுத்தார். உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்! மென்மேலும் தொடர்ந்து நன்மை செய்! மனிதர்கள் அனைவரும் செய்ய வேண்டிய இக்கட்டளைகளை,

> “---------------
> இரண்டு கட்டளைகளை
> எனக்குக் கொடுத்தான்
> எல்லா உயிர்க்கும் நன்மை செய்
> செய்யும் நன்மையை
> மென்மேலும் செய்
> -ப.14- தேன்கிண்ணம்

என்ற கவிதை வரிகளில் உரக்கச் சொல்லியிருப்பதை அறிய முடிகின்றது.

கடவுளும் மாந்தனும் என்ற கருத்து வள்ளுவருக்கு முன்னரே தமிழ்க் குமுகம் கடவுள் பற்றிய தெளிவான கோட்பாட்டினைக் கொண்டிருந்தது. கடந்து நின்றவன், உள்ளிருந்து இயக்குகின்றவன் என்ற பொருள் பொதிந்த சொற்கள் கடவுளின் பேராற்றலையும் இயங்கு நிலையையும் விளக்குகிறது என்று கட்டுரையாளர் கூறியுள்ளார். (ப.58, கவிஞர் சூ.செல்லப்பாவின் படைப்புலகம்)

கடவுளைத் தேடி ஒருநாள் காட்டுக் கோவிலுக்குக் கவிஞர் சென்றுள்ளார். ஆனால் அக்கடவுளோ, நடந்து, நடந்து நலிந்து போன தம்முடைய தொண்டர்களின் திருவடிகளைக் கழுவிடக் காடெல்லாம் திரிகின்றாராம் என்ற செய்தியினை,

> “-----------
> அவனோ
> நடந்து நடந்து
> நலிந்ததன் கழுவிடத்
> திரிகிறானாம் காடெல்லாம்”

**-ப.14- தேன்கிண்ணம்**

கவிதை வரிகளாக்கி நயம்பட உரைத்துள்ளார். இக்கவிதை உருவாக்கம் மற்றும் கருவாக்கம் பெறுவதற்கு, தூய விவிலியம் அடிப்டைக் காரணம் என்பதைக் கவிஞர் விளக்கியுள்ளார்.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இறைவன் இயேசு பிரான் தன்னுடைய சீடர்களின் கால்கலைக் கழுவும் முக்கியமான நிகழ்வு, உலகில் வேறு எந்த குருவானவரும் தன்னுடைய சீடர்களுக்குச் செய்யாத, அளப்பறிய, சீடர்கள் பின்பற்ற வேண்டிய அரிய செயலைச் செய்து காட்டினார்.

> “போஜனத்தை விட்டெந்து வஸ்திரங்களைக்
> கழற்றி வைத்து. ஒரு சீலையை எடுத்து
> அரையிலே கட்டிக் கொண்டு, பின்பு பாத்திரத்தில்
> தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும்,
> தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

தொடங்கினார்.!!
(தூய விவிலியம் யோவான் 13:4-5)

விவிலியத்தில் இயேசு பிரான் நிகழ்த்திய ஒரு செயலை கவிதையாக்கிய ஆளுமையை உணர முடிகின்றது.

## முடிவுரை

படைப்பாளி அறிஞர் சூ.செல்லப்பா கரிசல் வட்டாரத்தில் பிறந்து கவி ஆளுமையால் உயர்ந்து நிற்பவர். இயற்கையை அழக்கக்கூடாது என்ற பொதுமைத் தன்மையை விளக்கியுள்ளார். மனித குலத்திற்கு இயற்கையின் கொடை அளப்பறியது.

இயற்கை கொடுக்கும் உணவைப் பெற்றுக் கொள்கிறோம். ஆனால் மனிதன் இறக்கும்போது அவனது உடலை இயற்கையே (நிலம்) உணவாக்கிக் கொள்கிறது என்ற உணவுப் பரிமாற்றத்தைக் கவிதையாக்கியுள்ளார்.

தன்னுடைய ஊரின் குளங்கள் தண்ணீரின்றி வற்றியதைக் கண்ணுற்ற கவிஞரின் கண்கள் கண்ணீர்க் குளமாகிவிட்டது என்ற துன்பியலை எடுத்தாண்டுள்ளார்.

இயற்கையாக ஆற்று மணல் மனிதருக்குப் பயன்படுவதைப் பொறுத்துக் கொள்க முடியாமல், திருட்டுக் கூட்டமான மணல் கொள்ளையர்களைக் கவிதையில் சாடியுள்ளார்.

உலகத்தைப் பல விதங்களில் அழகுணர்ச்சியுடன் படைத்த கடவுளைப், “படிமக் கலைஞன்” என்ற பெயர் சூட்டி அழைத்துள்ளார். சிறிய உயிர்கள் கூடத் தற்கொலை செய்யாத நிலையில் மனிதன் மட்டும் ஏன் தற்கொலை செய்கிறான்? ஏன்ற வினாவை எழுப்புகிறார்.

இறைவன் இயேசுபிரான் தம்முடைய சீடர்களின் கால்களைக் கழுவிய தூய விவிலிய நிகழ்வைக் கதைக் களமாக்கியுள்ளார். அதாவது, இறைவனைத் தேடித்தேடி அலைந்த மனிதரின் கால்களை இறைவனே கழுவிய முன்மாதிரியான தாழ்மைக் குணத்தை உலகிற்குச் சொன்ற படைப்பாளியாக சூ.செல்லப்பா (IAS) வாழ்ந்து வருகின்றார் என்பதை ஆராய முடிகின்றது.

© 2026 மோனிகா காந்தி மோ, முனைவர். வைடூரியம்மாள் பா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..